பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 619 **நாள்: 26.10.2026**

மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், அடையாறு மண்டலம், வேளச்சேரி, ஏ.ஜி.எஸ். காலனி, வீராங்கல் ஓடை உள்ளிட்ட பகுதிகளில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இன்று (26.10.2026) மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வேளச்சேரி பகுதியில் ஏ.ஜி.எஸ். காலனி, கல்கி நகர், ராம் நகர், EB காலனி, சரஸ்வதி நகர், சொக்கலிங்கம் நகர் உள்ளிட்டப் பகுதிகளில் மழைநீர் தேங்காமல் இருப்பதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக படகுகள், டிராக்டரில் பொருத்தப்பட்ட மோட்டார் பம்புகள், 100 HP மோட்டார்கள், மழைநீர் வடிகால், நீர் உறிஞ்சும் வாகனம் தயார் நிலையில் வைக்கப்பட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளதைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதனைத் தொடர்ந்து, வீராங்கல் ஓடை, பள்ளிக்கரணை, கைவேலி சந்திப்பு பகுதியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின் போது, தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அ.தாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி.